

# “வள்ளுவர் கோட்டத் திறப்புக்கு கலைஞருக்கு அழைப்பு இல்லை. ஏன்?”

**கழக இளைஞர் அணி நடத்திய ‘தி.மு.க. 75 அறிவுத்திருவிழா’ நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக நடைபெற்ற ‘இருவண்ணக்கொடிக்கு வயது 75’ கருத்தரங்கத்தின் இரண்டாம் அமர்வில், ‘கழகம், மேடைகளில் நிகழ்த்திய கலகம்’ என்னும் தலைப்பில் ஊடகவியலாளர் செந்தில்வேல் அவர்கள் ஆற்றிய உரை :**



**செந்தில்வேல்**
**ஊடகவியலாளர்**

“1974-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 18-ஆம் நாள் வள்ளுவர் கோட்டத்திற்கு முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் அடிக்கல் நாட்டுகிறார். அடிக்கல் நாட்டிவிட்டு அவரது உடன்பிறப்புகளுக்குக் கடிதம் எழுதுகிறார்.

## அகக்கண்ணால் காண்கின்றேன்

‘நயமான தமிழ் எடுத்து நாவலரும், பேரருவியின் பெருக்கென தமிழ் முழக்கி பேராசிரியரும், தமிழ் நிலத்தில் ஆழ உழுது அரும் பொருட் கருவூலங்களை வழங்குகின்ற பாவாணரும், சிந்து பாடும் சிற்றாறு என முத்தமிழ்க் காவலரும், அவர்களோடு இணைந்த காரணத்தால் நானும், அன்று ஆற்றிய உரைகள், நடைபெற்ற தொடக்கவிழா நிகழ்ச்சி, கல்லிலே உளி கொண்டு செதுக்கி, சிற்ப வேலைகளைத் தொடங்கிய காட்சி, அதே சமயம் நூற்றுக்கணக்கான சிற்றுளிகள் கற்களில் பரதமாடி எழுப்பிய சதங்கை நிகர்த்த சங்கீத ஒலி, அடடா... அடடா... கரும்புத் தூண் நட்டு, கற்கண்டு கூரை வேய்ந்து, கனிச்சாறு கொண்டு தரை மெழுகி, சர்க்கரையால் கோலமிட்டது போல இருந்தது அந்த விழா. உடன்பிறப்பே அன்று தொடங்கிய முயற்சிக்கு தொய்வு நேராமல் பணிகள் நடைபெறுகின்றன’ என்று விரிவாக எழுதி மகிழ்ச்சி அடைந்தவர், கலைஞர்.



அவ்வளவு மகிழ்ச்சியாக அந்த வள்ளுவர் கோட்டத்தைக் கட்டி எழுப்பிய கலைஞரின் ஆட்சி, வள்ளுவர் கோட்டம் திறக்கப்படுவதற்கு முன்பே கலைக்கப்படுகிறது. குடியரசுத் தலைவர்தான் வந்து வள்ளுவர் கோட்டத்தைத் திறந்துவைத்தார். அந்த விழாவிற்கு முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞருக்கு அழைப்புகூட விடுக்கப்படவில்லை. கலைஞர் சோர்ந்து போகவில்லை. ‘சரித்திரத்தில் நமக்கு கிடைக்கிற இடம் சலுகையால் பெறக்கூடியது அல்ல. எது நேர்ந்தாலும், என்ன நேர்ந்தாலும், மறைக்க முடியாத இடம் இது. அந்த நம்பிக்கையுடன்தான் இன்று நடக்கும் வள்ளுவர் கோட்டத் திறப்பு விழாவை அகக்கண்ணால் காண்கின்றேன்’ என்று தன் உடன்பிறப்புகளுக்குக் கடிதம் எழுதினார். அந்த முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர், அன்றைக்கு வள்ளுவர் கோட்டத்தை ஏன் கட்டி எழுப்பினாரோ அதன் நோக்கம், அவருடைய பேரனால் இன்று நிறைவேறி இருக்கிறது என்பதில் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி.

## அறிவார்ந்த மேடை

இந்த அமர்வில் பேசுவதற்காக நான் என் உரையைத் தயார் செய்துகொண்டிருந்தேன். அதற்காகப் பத்து, பதினைந்து புத்தகங்களைப் படித்து குறிப்புகள் எழுதிக்கொண்டிருந்தேன். இரண்டு நாட்களுக்கு முன்பு, தங்கை மதிவதனியைப் பார்ப்பதற்காக அவர் வீட்டுக்குச் சென்றிருந்தேன். நானாவது பத்துப் பதினைந்து புத்தகங்களைப் படித்துத்தான் குறிப்புகள் எடுத்துக்கொண்டிருந்தேன். ஆனால் தங்கை மதிவதனியோ, 30-க்கும் மேற்பட்ட புத்தகங்களில் இருந்து குறிப்புகள் எடுத்துக்கொண்டிருந்தார். ஏனென்றால், ஏனோதானோ என்று பேசிவிட்டுப் போகிற மேடையில்லை இது. ஆழமான கருத்துகளை எடுத்துவைக்க வேண்டிய அறிவார்ந்த மேடை. ஏனெனில், அறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் போன்ற திராவிட இயக்கத் தலைவர்களின் உரை அனைத்தும் அறிவார்ந்த உரைகள். சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தி பேரறிஞர் அண்ணா நாடாளுமன்றத்தில் உரையாற்றியதும் தேசிய ஊடகங்கள் எல்லாம் அதைச் செய்தியாக வெளியிட்டன.

‘இந்தியாவிலிருந்து பிரிந்து போக வேண்டுமென்ற குரல் முதன்முதலாக சுதந்திர இந்தியாவின் நாடாளுமன்றத்தில் இன்று ஒலித்தது. இந்த முழக்கத்தைத் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அண்ணாதுரை அவர்கள், இன்று மாநிலங்களவையில் முழங்கினார். இந்திய யூனியனிலிருந்து தென்னகம் பிரிந்து போக வேண்டுமென்ற அண்ணாதுரையின் துணிவான வாதம் நாடாளுமன்றத்தையே ஸ்தம்பிக்க வைத்தது’ என்று மும்பையிலிருந்து வெளிவந்த ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ நாளேடு சுட்டிக்காட்டுகிறது. ‘தி.மு.க. தலைவர் திரு சி.என்.அண்ணாதுரை தென்னகத்திற்கு சுய நிர்ணய உரிமை வேண்டுமென்ற கோரிக்கையைத் தெளிவாக எடுத்துரைத்தார். மாநிலங்கள் அவை இன்று கூடியிருந்து திராவிட நாட்டின் கொள்கைக்காகப் பாடுபடும் சொல்லாற்றல் மிக்க தலைவரின் பேச்சைக் கேட்டது, இந்திய தேசியத்திற்கு அவர் ஒரு புதிய விதியைத் தந்தார்’ என்று பாராட்டியது, ‘இந்துஸ்தான் டைம்’ ஏடு.

## ஆற்றல் மிகுந்த தலைவர் அண்ணா

இன்று மோடியின் கண்களில் விரலை விட்டு ஆட்டிக்கொண்டிருக்கிறார், நம்முடைய முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்று சொன்னால், அன்றைக்கு வாஜ்பாய் அவர்களிடம் நாடாளுமன்றத்தில் நேருக்கு நேராகக் கேள்வி கேட்டவர் அண்ணா. ‘இந்தி மொழிக்காக வாதிடும் வாஜ்பாய் அவர்களை நான் வாழ்த்துகிறேன், பாராட்டுகிறேன். அவர்மீது எனக்கு எந்த மன வருத்தமும் இல்லை. எங்கள் மாநிலத்திற்கும் இன்னும் நிறைய வாஜ்பாய்கள் வேண்டுமென்றே நான் கேட்கிறேன். வாஜ்பாய், அவர் நேசிக்கின்ற இந்தியை அவர் மாநிலத்தின் மொழியாக மட்டும் மாற்ற விரும்பவில்லை, இந்தியாவிற்கான மொழியாகவே மாற்ற விரும்புகிறார். அவருக்கு இருப்பது மொழிப்பற்று என்று சொன்னால், எனக்கு இருப்பது மட்டும் என்ன மொழி வெறியா?’ என்று வாஜ்பாயைப் பார்த்து கேள்வி எழுப்பி, நாடாளுமன்றத்தை அதிரச் செய்தவர் நம்முடைய ஆற்றல் மிகுந்த தலைவர் அண்ணா அவர்கள்.

இன்றைக்கு அதைத்தான் நம் தலைவர் பேசிக்கொண்டிருக்கிறார். நம்முடைய நம்பிக்கை நட்சத்திரம் உதயநிதி ஸ்டாலினும் அதற்காகத்தான் சண்டையிட்டுக்கொண்டிருக்கிறார் என்று சொன்னால், அண்ணாவிலிருந்து தொடங்கிய சண்டை இது. அதன் பிறகு கலைஞர்; கலைஞருடைய கலகக் குரலை நான் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

‘அம்பாள் என்றைக்கடா பேசினாள்?’ என்று கேட்டபோது, ஆடித்தான் போனார்கள் அத்தனை பேரும். ‘கோயில் கூடாது என்று சொல்லவில்லை, கோயில் கொடியவர்களின் கூடாரமாக ஆகிவிடக் கூடாது என்று சொன்னேன்’ என்பது வரை நம் எல்லோருக்கும் தெரியும். அதே ‘பராசக்தி’யில் இன்னொரு காட்சி வரும். கல்யாணி குழந்தையைக் கொன்றுவிட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டு நீதிமன்றத்தில் குற்றவாளிக் கூண்டில் நிற்பாள். கல்யாணியோ, தன் ஏழ்மையால் பால் கொடுத்து பசியாற்ற முடியாததால் குழந்தையைக் கொன்றுவிட்டதாகச் சொல்வாள். ‘எப்படியும் நீ குழந்தையைக் காப்பாற்றியிருக்க வேண்டும்’ என்று நீதிபதி சொல்வதற்கு கல்யாணி சொல்லும் பதில் என்ன தெரியுமா?

## கலகக்குரலுக்குத் தீர்வு

‘என் குழந்தை என்ன திருஞான சம்பந்தரா, பார்வதி வந்து பால் கொடுத்து காப்பாற்ற?’ - இப்படிப் போகிறபோக்கில் புராணங்களைக் கேள்வி கேட்டவர், கலைஞர். அவர் கேள்வி கேட்டதுடன் மட்டும் நிறுத்தவில்லை. அந்த கலகக்குரலுக்குத் தீர்வையும் கொண்டுவந்தார். கலைஞர் முதல்வரானதும் கர்ப்பிணிப்பெண்கள் சத்தான உணவைச் சாப்பிட மாதம்தோறும் ஆயிரம் ரூபாய் நிதியுதவியும் தந்து, கல்யாணிகள் உருவாகாமல் பார்த்துக்கொண்டதும் கலைஞருடைய மாபெரும் சாதனை என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

‘தென்னைமரம் நாம் வளர்த்தது. தென்னை மரத்தில் இருந்து உருவான தேங்காய் கருவறைக்குள் போய்விட்டது. ஆனால், தென்னை மரத்தை வளர்த்த நம்மால் கருவறைக்குள் செல்ல முடியவில்லை. ஏன் தெரியுமா? தேங்காய்க்கு குடுமி இருக்கிறது. பூச்செடியை நாம் வளர்க்கிறோம், அந்தப் பூச்செடி பூமாலையாக மாறி, இறைவனிடம் சென்று சேருகிறது. அந்தப் பூச்செடியை வளர்த்த நம்மால் போக முடியவில்லை. காரணம், என்ன தெரியுமா? அந்தப் பூக்களை இணைப்பதற்கு நூல் இருக்கிறது, நம்மிடம் நூல் இல்லை’ என்று கலைஞர் ஒருமுறை மேடையில் பேசும்போது சொன்னார். என்ன ஒரு சுவையான கலகக்குரல்! சரி இதைச் சொன்னாரே, சொன்னதோடு விட்டாரா? இல்லை, அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆக சட்டமும் கொண்டுவந்தார். அதற்குத்தான் எத்தனை தடைகள்! கலைஞர் காலத்துக்குப் பிறகு முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அதை நடைமுறைப்படுத்தி, பெரியார் நெஞ்சில் தைத்திருந்த முள்ளை எடுத்தார்.

இப்படி எதையெல்லாம் மேடையில் பேசினார்களோ, அதையெல்லாம் செய்து காட்டிய இயக்கம், எந்தக் கேள்விகளை எல்லாம் எழுப்பினார்களோ அதற்கு எல்லாம் தீர்வு கண்ட இயக்கம்தான் திராவிட முன்னேற்றக்கழகம்.”

## அனைவரும் போற்றும் அறிவுத்திருவிழா!

**திரைத்துறையில் பணியாற்றிய பா.பிரேம் அவர்கள், அறிவுத்திருவிழா குறித்து தன் முகநூலில் எழுதிய பதிவில் இருந்து...**

‘தி.மு.க.வின்-75 அறிவுத் திருவிழா நிகழ்வின் காணொலிகளைப் பார்த்துக்கொண்டிருக்கிறேன்..

இந்தியாவில் கம்யூனிஸ்ட் கட்சிகள், அம்பேத்கரிய இயக்கங்கள், தமிழ்நாட்டில் வி.சி.க. உள்ளிட்ட இடதுசாரி கட்சிகள், இயக்கங்கள் தவிர்த்து... ஆட்சி அதிகாரத்தில் இருக்கும், அதற்கு அருகாமையில் இருக்கும் SO CALLED பெரிய கட்சிகள் உள்ளே இப்படியொரு ‘உரையாடல்’ நிகழ்வதற்கான வாய்ப்பே இல்லை என்று கூறுமளவிற்கான ஒரு நிகழ்வினை நடத்திக் கொண்டிருக்கிறது, தி.மு.க.

‘அண்ணா’ திராவிட முன்னேற்றக் கழகம் என்று பெயர் வைத்துக்கொண்டு தமிழ்நாட்டை அதிக முறை ஆண்ட ஒரு கட்சிக்குள், அண்ணாவை மட்டுமே முன்வைத்துகூட இப்படியொரு உரையாடலை நிகழ்த்தவே முடியாது என்கிற உண்மையையும்...

‘தமிழக’ என்று அண்ணாவின் ‘தமிழ்நாடு’ என்பதை நீர்த்துப்போகச் செய்வது போன்று கட்சிக்கே பெயர் வைத்துக்கொண்டு, முதல் தேர்தலிலேயே நான்தான் முதல்வர் என்று துடிக்கிற கட்சியில் இப்படியானதொரு உரையாடல் நடக்குமா? என்று தெரியவே தெரியாத நிலையில்..

ஆட்சி அதிகாரத்தில் இருந்துகொண்டு, தொடர்ச்சியாக இப்படியானதொரு உரையாடலை நிகழ்த்திக்கொண்டிருக்கிற தி.மு.க.வைப் பாராட்டலாம்.